அவர்கள் வாத்துக்கு  வைத்த பெயர்) மிகுந்த சந்தோஷமாகக் காலம் கழித்து வந்தார்கள்.



வீரனும் இதைப் பார்க்க நேரிடும். பார்த்ததும் கதறிவிடுவார்கள். இதை நமது தோட்டத்தில் ஒரு மூலையில் புதைத்துவிடுவதே நல்லது”என்றார் முதலியார்.

"அது சரி, பள்ளிக்கூடம் விட்டு வரும் குழந்தைகளுக்கு நாம் என்ன பதில் சொல்வது? வீட்டுக்குள் நுழைந்ததும் ‘கஸ்தூரி எங்கே?' என்று கேட்பார்களே!” என்று கலங்கிய கண்களுடன் கேட்டாள் முதலியாரின் மனைவி.

"என்ன சொல்வது? கஸ்தூரி எங்கிருந்தோ தானே வந்தது! ‘அது வந்த இடத்திலிருந்து ஆட்கள் வந்தார்கள்; வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள்,’ என்று சொல்லிவிட்டால் போகிறது. வேறு வழியில்லை" என்றார் முதலியார்.

பிறகு, முதலியார் தோட்டத்திற்குச் சென்றார். ஓர் இடத்தில் ஒரு குழியைத் தோண்டினார்; அங்கே கஸ்தூரியைப் புதைத்துவிட்டார்,

## மாலை மணி ஐந்தரை இருக்கும்.

பள்ளிக்கூடம் விட்டு முரளியும், சீதாவும் வந்தார்கள். வீட்டுக்குள் நுழையும்போதே 'கஸ்தூரி!' என்று கூப்பிட்டாள் சீதா.

"எங்கே இந்த நேரத்தில் வாசலில்தானே நிற்கும்? எங்கே போய்விட்டது? கஸ்தூரி! கஸ்தூரி!”என்று பலமாகச் சத்தம் போட்டு அழைத்தான் முரளி.

கஸ்தூரி வரவில்லை. இருவரும் புத்தகப்

